**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.**46/2014

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ஆம் நாள் **பி.சா.4** சாட்சி **திருமதி. ஜெகதீஸ்வரி** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திருமதி. ஜெகதீஸ்வரி** | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**பி.சா.4 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். நான் அய்யன் சாலையில் குடியிருந்து வருகிறேன். எனக்கு 2004ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பு எங்கு குடியிருந்தேன் என்றால் எனது அப்பாவுடன் குடியிருந்தேன். எனது அப்பாவின் அப்பா பெயர் சகாதேவன் முதலியார். எனது அப்பா கையெழுத்து போடுவாரா என்றால் போடுவார். எஸ்.குப்புசாமி என்று தமிழில் தான் கையெழுத்து போடுவார். எனது அப்பா

கையெழுத்துபோட்டதை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் உள்ள முதலாவதாக உள்ள சாட்சியம் கையெழுத்து எனது அப்பாவுடையது தான். எனது அப்பா எப்பொழுது இறந்தார் என்றால் 2019. எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. தாக்கல் செய்கிறேன். எனது அப்பாவின் இறப்புச் சான்றிதழ் **Ex.X**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பள்ளியில் படித்தற்கான மாற்றுச்சான்றிதழ் கொண்டு வந்துள்ளேன். அதில் எனது அப்பா கையெழுத்து போட்டுள்ளார். அது **Ex.X**3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து வந்த சாட்சி அழைப்பாணை வந்த பின் நான் யாருடைய அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் தற்போது விசாரித்த வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றேன். என்னுடன் யார் வந்தார் என்றால் சுப்பிரமணியம் என்னுடன் வரவில்லை. முதல் விசாரணையில் விசாரித்த வழக்கறிஞர் அலுவலகம் செல்ல சொன்னார். அங்கு என்ன கேட்டார் என்றால் எனது அப்பாவை கேட்டார்கள். நான் இறந்துவிட்டார் என்று விளக்கம் கொடுத்தேன். யார் கேட்டார் என்றால் வீட்டில் வந்து ஒரு அக்கா வந்து கேட்டார் அவர் பெயர் தெரியவில்லை. எதற்காக இந்த விவரங்களை கேட்டார்கள் என்று நான் கேட்டேனா என்றால் எனது அப்பா சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்று சொன்னார்கள். என்ன காரணத்திற்காக கேட்டார்கள் என்று நான் கேட்டேனா என்றால்

இல்லை. என்னிடம் வந்து கேட்ட அக்கா தற்பொழுது நீதிமன்றம் வந்துள்ளார்களா என்றால் வந்துள்ளார்கள். இறப்பு சான்றிதழை நான் இந்த அக்காவிடம் தான் கொடுத்தேன். நான் இந்த அக்காவிடம் என்ன காரணத்திற்காக இறப்பு சான்றிதழை கேட்கிறீர்கள் என்று கேட்டேனா என்றால் இல்லை. கையெழுத்து எனது அப்பாவுடையது என்று சொன்னேன். வழக்கறிஞர் அலுவலகம் எப்போது சென்றேன் என்றால் நோட்டீஸ் வந்தவுடன் சென்றேன். யாருடன் சென்றேன் என்றால் நோட்டீஸ் வந்து இரண்டு நாட்கள் கழித்து இந்த அக்காவுடன் சென்றேன். வழக்கறிஞர் அலுவலகத்தில் எதாவது ஆவணத்தை காண்பித்தார்களா என்றால் காண்பித்தார்கள் எனது அப்பாவின் கையெழுத்து தான் என்று சொன்னேன். அது என்ன ஆவணம் என்று படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை எனது அப்பாவின் கையெழுத்து மட்டும் பார்த்தேன். எனது அப்பா கையெழுத்து போட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் வேறு எதாவது என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. நான் 2004 வரை எனது அப்பா வீட்டில் இருந்தேன். குடும்ப அட்டை உள்ளதா என்றால் இல்லை. நான் திருமணமாகி சென்றுவிட்டேன். 2004க்கு முன்பு குடும்ப அட்டையில் அனைவரின் பெயரும் உள்ளதா என்றால் வரும் ஆனால் தொலைந்துவிட்டது. எனது அப்பாவின் கையெழுத்தை வழக்கறிஞர் அலுவலகத்தில் தான் நான் முதல் முதலாக பார்க்கிறேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு நான் பார்த்து இல்லை என்றால் பள்ளி படிக்கும்போதும், திருமணத்திற்கு முன்பும் பார்த்திருக்கிறேன்.

நான் பிறந்த தேதி என்ன என்றால் 12.06.1983. எனது அப்பா கையெழுத்து உள்ள பி.சா.ஆ.2 ஆவணம் எப்பொழுது எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ.2 ஆன ஆவணம் 23.08.1984ல் எழுதப்பட்டது என்றால் சரிதான். அப்பொழுது எனக்கு ஒரு வயது கூடபூர்த்தியாக வில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2ல் எதற்காக எங்கு கையெழுத்து போட்டார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் படித்துப்பார்க்கவில்லை. பி.சா.ஆ.2 ஆன ஆவணம் யார் யார்கிடையே ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ.2 என்ன ஆவணம் என்றும், பி.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது உடன்பிறந்தவர்கள் உள்ளார்களா என்றால் அண்ணா உள்ளார். பி.சா.ஆ.2ல் உள்ள கையொப்பம் எனது அப்பாவுடையது என்று அப்பொழுது ஒரு வயதுடைய நான் அடையாளம் காட்ட இயலாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வேண்டி பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் எனது அப்பா கையெழுத்து போட்டிருக்கிறார். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.